9th August 1966]

அது முறையல்ல. கூடியவரையில் தாமதமின்றித் தீர்க்கப்பட வேண்டுமென்ற கருத்து வற்புறுத்தப்பட்டு வருகிறது. தாமதத் திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

திரு. எம். எஸ். மணி : இந்த லேபர் கோர்ட்டுகள் பற்றாக் குறை யாக இருப்பதால்தான் வழக்குகள் தீர்க்கப்படுவதில் தாமதப்படு கின்றது என்று கூறப்படுகிறது. ஆகவே, மேலும் இரண்டு கோர்ட்டுகளை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விஷயம் அப்போதைக் கப்போது பரிசிலனை செய்யப்பட்டு லேபர் கோர்ட்டுகள் அதிகப் படுத்தப்பட்டுத்தான் வருகின்றன.

பொய்ச் சான்றிதழ்கள்

*** 251 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) S.S.L.C. தேரியதாக பொய் சர்ட்டிபிகேட்டுகள் பலரிடம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அகப்பட்ட வர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It is under investigation and hence it is not desirable to disclose any information.

திரு. ஆ. தங்கவேலு : இந்த வழக்கு விசாரணையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் பொய் சர்ட்டிபிகேட்டுகள் பெற்று அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு இரண்டு மூன்று ஆண்டுகளாகவே இது காலம் கடத்தப்பட்டு வருகிறது. இதில் டைரக்டர் ஆஃப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் சம்பந்தப்பட்டு இருப்பதால் காலம் கடத்தப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வழக்கு பரிசிலனையில் இருக் கிறது என்று சொன்னேன். அதற்கு மேல் விவரங்கள் இப்போது கூறுவது முறையல்ல.

Minimum Wages Committee

* 252 *Q.*—SRI R. ABDUL KHALEEL : Will the Hon. the Chief Minister be pleased to state—

Whether there is any proposal to enhance the rates of daily allowance fixed for the members of Minimum Wages Committee constituted in 1965 for fixing minimum rates of wages to the employees of the Beedi and Tobacco manufacturing industries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.